சாட்சிகளின் வாக்குமூலம்

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 54/2024**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

வாக்குமூலம் – வா.சா–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தேவி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 24ம் நாள் சாட்சியம்.

---

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை சரிபார்க்கப்பட்ட நகல்.

2. 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை சரிபார்க்கப்பட்ட நகல்.

3. 3ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை சரிபார்க்கப்பட்ட நகல்.

4. குடும்ப அட்டை

5. 29.07.2024 தேதியிட்ட ராமா கவுடர் என்கின்ற K.B.ராமன்–ன் இறப்புச் சான்றிதழ் அசல்.

6. 29.07.2024 தேதியிட்ட பட்டியம்மாள்–ன் இறப்புச் சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல்.

7. 29.11.2011 தேதியிட்ட திருப்பூர் மாவட்டம், பல்லடம் காவல்நிலையத்தினர் அளித்த குற்ற எண்.2292/2011 முதல் தகவல் அறிக்கை சான்று நகல்.

8. 15.10.2021 தேதியிட்ட இறுதி அறிக்கை சான்று நகல்.

9. 02.01.2024 தேதியிட்ட ஆர்.சி.எஸ் எண்.1/2024 சான்று நகல்.

10. வாதியின் குடும்பத்தாரின் குடும்ப அட்டை சரிபார்க்கப்பட்ட நகல்.

11. வாதியின் கணவர் காணாமல் போன தேசிங்குவின் பான் கார்டு அசல்.

12. முதல் வாதியின் கணவர் தேசிங்குவின் Star Health Insurance Card அசல்.

13. முதல் வாதியின் கணவர் தேசிங்குவின் State Bank of India, Palladam Branch பாஸ் புக் அசல்.

14. முதல் வாதியின் கணவர் தேசிங்கு காணாமல் போனதால் வாரிசு சான்று அனுப்ப கோரி கிளை மேலாளர் பிரின்சிபல் அக்கவுண்டன்ட் ஜெனரல் அனுப்பிய கடிதம், தேசிங்குவின் முகவரிக்கு அனுப்பியது அசல்.

15. 25.04.2024 தேதியிட்ட வாதிகள் 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய மனு கையிருப்பு நகல்.

16. 26.04.2024 தேதியிட்ட 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய மனுவினை பெற்றுக் கொண்டதற்கான ஆன்லைன் நகல்.

17. 17.05.2024 தேதியிட்ட 2ம் பிரதிவாதி வழங்கிய உத்தரவு அசல்.

ஆகியவற்றை வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2026.02.24 18:32:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.